13 MAY 1996

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1995, திசெம்பர் மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1995, திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.80 — தபாற் செலவு : ரூபா 2.55

1995 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி, பிணையங்கள் (திருத்தச்) சட்டம்

[1995, திசெம்பர் மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 87/93

**பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படுவதான) பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டத்துக்கான விரிவுப் பெயர், "அரசாங்க வாக்குறுதிப் பத்திரங்களையும், காவுவோன் முறிகளையும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "அரசாங்க வாக்குறுதிப் பத்திரங்களையும், காவுவோன் முறிகளையும், திறைசேரி முறிகளையும்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது. 420 ஆம் அத்தியாயத்தின் விரிவுப் பெயரை திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(இ) காவுவோன் முறிகள் என்ற வகையிலான பிணையங்களை வழங்குவதன் மூலம்;

(ஈ) திறைசேரி முறிகள் என்ற வகையிலான பிணையங்களை வழங்குவதன் மூலம்," ;

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் "வாக்குறுதிப்பத்திரங்களையும், காவுவோன் முறிகளையும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "வாக்குறுதிப்பத்திரங்களையும், காவுவோன் முறிகளையும், திறைசேரி முறிகளையும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ), (இ), (ஈ), (உ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஆ) கடனைத் திரட்டும் மாதிரிகளையும் அத்தகைய கடன் திரட்டப்படவேண்டிய முறையையும் ;

2—ஈ 038907—2,045 (95/10)

(இ) கடனின்மீது செலுத்தப்படற்பாலதான வட்டி வீதத்தையும் அல்லது செலுத்தப்படற்பாலதான வட்டிவீதத்தைத் தீர்மானிக்கும் விதத்தையும்;

(ஈ) கடனின்மீதான வட்டி செலுத்தப்படற்பாலதான திகதிகளையும்;

(உ) அக்கடனை மீட்கும் நோக்கத்துக்காகத் தாபிக்கப்பட்ட கடனீர் நிதியத்துக்கான உதவுதொகையாகத் திரட்டு நிதியத்திலிருந்தும் இலங்கையின் சொத்துக்களிலிருந்தும் ஆன ஒதுக்கீடு செய்யப்படவேண்டிய விதத்தையும் எக்காலப்பகுதியின் முடிவில் அவ்வொதுக்கீடு செய்யப்படவேண்டுமோ அக்காலப்பகுதிகளையும், அவ்வுதவுதொகைகள் ஆரம்பிக்கப்படவேண்டிய திகதியையும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 5அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது சட்டவாக்கத்தின் 5அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பங்குத் தொகுதிகளையும் பிணையங்களையும் கொள்வனவு செய்வதன் மீதான மட்டுப்பாடுகள்.

5அ. பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதியை அல்லது பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஏதேனும் விண்ணப்பம் அல்லது எவையேனும் விலைக்கோரல்கள் [illegible] களைக் கருத்திற்கொண்டு, முதனிலை வணிகர்களுக்கும் பதவிப் பெயர் குறிக்கப்பட்ட வங்கிகளுக்கும் விலைக் கேள்வியாளர்களுக்கும் மட்டுப்படுத்தப்படுதல் [illegible]

முதன்மைச் சட்டவாக்கத்தில் 21அ, 21ஆ, 21இ, 21ஈ, 21உ, 21ஊ என்னும் பிரிவுகளை உட்புகுத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய தலைப்புகளும் புதிய பிரிவுகளும் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அச்சட்டவாக்கத்தின் 21அ, 21ஆ, 21இ, 21ஈ, 21உ, 21ஊ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"இறைசேரி முறிகள்

இறைசேரி முறிகள்.

21அ. (1) ஒவ்வொரு இறைசேரி முறியும், வழங்கப்பட்டபோது, இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க 4 ஆம் பிரிவின்கீழான கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட வீதத்திலும் திகதிகளிலும் அல்லது அக்கட்டளையில் ஒதுக்கப்பட்டதும் அத்தகைய முறியை மீட்பதற்கானதுமான ஒரு விருப்பத் தெரிவைப் பின்பற்றி, முறியானது முதலாகவுள்ள எந்தப் பணத்தொகைக்கு வழங்கப்படுகின்றதோ முதலாகவுள்ள அந்தப் பணத்தொகையையும் அதன்மீதான வட்டியையும் செலுத்துவதற்கு அரசாங்கத்தைப் பிணித்தல் வேண்டும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், திறைசேரி முறிகள் ஒன்றில் எழுத்திலான சான்றிதழ்கள் என்ற வடிவத்திலான முறிகளாக கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளாக வழங்கப்படலாம். எழுத்திலான சான்றிதழ்கள் என்ற வடிவத்தில் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் விடயத்தில், 21ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய எழுத்திலான சான்றிதழ்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும். கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளின் விடயத்தில், அத்தகைய கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளுக்கு 21இ, 21ஈ, 21உ, 21ஊ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

எழுத்திலான சான்றிதழ்களின் வடிவத்திலான திறைசேரி முறிகள்.

21ஆ. (1) எழுத்திலான சான்றிதழ் என்ற வடிவத்தில் வழங்கப்பட்ட ஒவ்வொரு திறைசேரி முறியும் அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் பதிவாளரால் ஒப்பமிடப்பட வேண்டுமென்பதுடன். அதற்கான உரித்து முறியின் புறக்குறிப்பின் மூலமும் ஒப்படைப்பின் மூலமும் கைமாற்றப்படற்பாலதாதலும் வேண்டும்.

(2) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும்,

(அ) எழுத்திலான சான்றிதழ் என்ற வடிவத்தில் வழங்கப்பட்ட திறைசேரி முறிபொன்றின் புறக் குறிப்பெதுவும், அந்நோக்கத்துக்கென ஏற்பாடுசெய்யப்பட்ட இடைவெளிகளுள் ஒன்றில் முறியின் பிற்புறத்தில் எழுதப்பட்ட திறைசேரி முறியை வைத்திருப்பவரின் ஒப்பத்தினால், அல்லது ஒழுங்குவிதியினால் விதந்துரைக்கப்பட்ட தனிவேறான படிவத்தில் செய்யப்பட்டாலொழிய, செல்லுபடியாதலாகாது;

(ஆ) ஆளொருவர் எழுத்திலான சான்றிதழ் என்ற வடிவத்தில் வழங்கப்பட்ட திறைசேரி முறிபொன்றில் புறக்குறிப்பிட்டுள்ளார், அல்லது அதைப் புறக்குறிப்பிட்டு ஒப்படைத்துள்ளார் என்ற காரணத்தினால் மட்டும், ஒன்றில் முதலாக அல்லது அதன்மீதான வட்டியாக வருமதியாகவுள்ள ஏதேனும் பணத்தைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளை வழங்குதலும் அவற்றில் வியாபாரம் செய்தலும் அவற்றின் பதிவேடுகளைப் பேணுதலும்.

21இ. (1) இக்கட்டளைச் சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளில் எது எவ்வாறிருப்பினும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளை வழங்குமாறு பணிக்கலாம். அத்தகைய கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகள் இப்பிரிவினதும் இக்கட்டளைச் சட்டத்தின் 21ஈ, 21உ, 21ஊ என்னும் பிரிவுகளினதும் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளை வழங்குவதற்கும் அவற்றில் வியாபாரஞ் செய்வதற்கும் அவசியமான ஏதேனும் நடவடிக்கையை எடுப்பதற்கு மத்திய வங்கி அதிகாரம் கொண்டதாதல் வேண்டும். மேற்போந்தவற்றின் பொதுமையை வரையறுக்காமல் மத்தியவங்கி பின்வருவனவற்றைப் பொறுப்பேற்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் அதிகாரங்கொண்டதாதல் வேண்டும் :—

(அ) கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளை வழங்குவதனையும் அவற்றில் வியாபாரஞ் செய்வதனையும் பதிவதற்கு மத்திய வங்கியின் பதிவேடுகளில் பதிவீடுகளைச் செய்தலும் பேணுதலும்;

(ஆ) நேரடிப் பங்குபற்றுநர்களுக்காக அல்லது மத்திய வங்கிக்காக அல்லது அவர்களின் அல்லது அதன் சார்பில் கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளின் சொத்துவத்தை அல்லது கட்டுக்காப்பான வைத்திருக்கைகளைப் பதிவதற்குக் கணக்குகளைப் பேணுதல்;

(இ) 21ஈ என்னும் பிரிவிற் குறிப்பிடு செய்யப்பட்ட நேரடிப் பங்குபற்றுநர்களைக் காலத்துக்குக்காலம் நியமித்தலும், கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளில் அவர்களின் கொடுக்கல் வாங்கல்களையும் நேரடிப் பங்குபற்றுநர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய நேரடிப் பங்குபற்றுநர்களை ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும் ;

(ஈ) 21ஈ என்னும் பிரிவிற் குறிப்பிடு செய்யப்பட்ட வணிகர் நேரடிப் பங்கு பற்றுநர்களைக் காலத்துக்குக் காலம் நியமித்தலும், கட்டுப் பணமில்லாத திறைசேரி முறிகளில் அவர்களின் கொடுக்கல் வாங்கல்களும் வர்த்தகர் நேரடிப் பங்குபற்றுநர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய வர்த்தகர் நேரடிப் பங்குபற்றுநர்களை வணிகர் இடைத்தரகர்கள் ஒழுங்குபடுத்துதலும், மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும் ;

(உ) வணிகர் இடைத்தரகர்களைக் காலத்துக்குக் காலம் நியமித்தலும், கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளில் அவர்களின் தரகுத் தொழிலும் வணிகர் இடைத்தரகர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய வணிகர் இடைத்தரகர்களை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும் ;

(ஊ) முதனிலை வணிகர்களைக் காலத்துக்குக் காலம் நியமித்தலும் பிணையங்களில் அவர்களின் கொடுக்கல் வாங்கல்களும் முதனிலை வர்த்தகர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய முதனிலை வர்த்தகர்களை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்த தலும் ;

(எ) பதவிப்பெயர் குறிக்கப்பட்ட வர்த்தகரல்லாத விலைக்கேள்வியாளர்களை நியமித்தலும், பிணையங்களில் அவர்களின் கொடுக்கல் வாங்கல்களும் வர்த்தகரல்லாத விலைக்கேள்வியாளர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய வர்த்தகரல்லாத விலைக்கேள்வியாளர்களை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும் கண்காணித்தலும் ;

(ஏ) கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளுக்கான ஒழுங்கான சந்தையொன்றை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் நடத்தைக்கோவையொன்றை வகுத்தமைத்தல்

2—ம 038007 (95/10)

(3) மத்திய வங்கியானது 21இ, 21ஈ, 21உ, 21ஊ என்னும் பிரிவுகளில் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்படாத அளவுக்கு பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்யுமாறு, நேரடிப் பங்குபற்றுநர்களுக்கு அல்லது அவர்களின் ஏதேனும் வகுதிக்கு பணிப்புகளை வழங்கலாம்.

(அ) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்களின் வாடிக்கையாளர்களினது கணக்குகள் பேணப்பட்டு நிருவகிக்கப்பட வேண்டிய முறை ;

(ஆ) முதல், வட்டிக் கொடுப்பனவுகளும், ஏதேனும் மீட்பு வரும்படிகளும் அத்தகைய கணக்குகளுக்கு வரவு வைக்கப்படவேண்டிய நேரங்கள் ;

(இ) அத்தகைய கணக்குகளைப் பேணுவதற்கும் நிருவகிப்பதற்கும் இறுக்கப்படக்கூடிய கட்டணங்கள் ;

(ஈ) நேரடிப் பங்குபற்றுநர்கள், வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்கள், அல்லது வணிகர் இடைநாகர்கள் என்போரை ஒழுங்கு படுத்தலும் மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும் ;

(உ) கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகள், அல்லது அவற்றின் கண்ணுள்ள அக்கறைகள் கொள்வனவு செய்யப்படக்கூடிய, விற்பனை செய்யப்படக்கூடிய கைமாற்றப்படக்கூடிய, அடைமானம் வைக்கப்படக்கூடிய அல்லது வில்லங்கத்துக்குட்படுத்தப்படக்கூடிய முறையும் வழிகளும்

நேரடிப் பங்கு பற்றுநர்கள். 21ஈ (1) மத்திய வங்கியானது நேரடிப் பங்குபற்றுநராக விருப்பதற்கென எவரேனும் முதனிலை வணிகரை அல்லது வேறு ஆளை எழுத்தில் நியமிக்கலாம்.

ஒவ்வொரு நேரடிப் பங்குபற்றுநரும் இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு மத்திய வங்கியில் தனது சொந்தக் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிக் கணக்கை வைத்துப் பேணுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர், மத்திய வங்கியுடன், அதன் நோக்கங்களுக்காகக் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகளை வைத்திருப்பதற்காகத் தனியொரு கணக்கைப் பேணுதல் வேண்டும். அத்தகைய கணக்கானது, நேரடிப் பங்குபற்றுநரால், காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் எழுத்தில் குறித்துரைக்கப்படும் படிவத்திலும் முறையிலும் பேணப்படுதல் வேண்டும்.

(3) மத்திய வங்கி, நேரடிப் பங்குபற்றுநர் ஒருவருடைய கணக்குப் பற்றிய பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பதிவேடுகள், அத்தகைய கணக்கின் நிலை பற்றிய முடிவான சான்றாதல் வேண்டும் என்பதுடன், மத்திய வங்கியையும் நேரடிப் பங்குபற்றுநரையும் பிணிப்பதாதலும் வேண்டும்.

(4) மத்திய வங்கியானது, நேரடிப் பங்குபற்றுநர்களினால் மத்திய வங்கியுடன் பேணப்படும் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிக் கணக்குகளுக்கிணங்க, அக்கட்டுப்பணமில்லாத் திறைசேரிமுறிகள் மீது வருமதியான எல்லாப் பணத்தொகை, வட்டி அல்லது மீட்பு வரும்படித் தொகைகளையும், அவை செலுத்தப்படற்பாலனவையாக வரும் திகதியன்று, அக்கணக்குகள் கட்டுப்பணமில்லாத் திறைசேரிமுறிகள் சம்பந்தமாக அவர்களின் சொந்தக் கணக்கில் வைத்திருக்கப்பட்டிருந்தாலென்ன, அல்லது அவர்களின் நோக்கத்துக்காக வைத்திருக்கப்படும் அத்தகைய திறைசேரி முறிகள் தொடர்பில் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்களின் விடயத்திலும் அத்துடன் கூட்டுமொத்த வாடிக்கையாளர்கள் கணக்குகள் தொடர்பிலான விடயத்திலும், செலுத்துதல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவுகள், மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வழிகளிலும் அத்தகைய முறையிலும் செய்யப்படுதல் வேண்டும்.

(5) நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர், மத்திய வங்கிக்கு, அதன் சொந்த கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறி தொடர்பிலும், அத்துடன் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரின் விடயத்தில் அதன் சொந்த கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிக் கணக்கு மற்றும் மத்திய வங்கி காலத்துக்குக்காலம் குறித்துரைக்கின்றவாறு அதன் கூட்டுமொத்த வாடிக்கையாளர்கள் கணக்குத் தொடர்பிலும், அத்தகைய விபரத்திரட்டுகளை, விபரங்களை, விபரக் குறிப்புகளை அல்லது தகவலைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(ஈ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அதன் ஒப்புரவு மூலதனத்தை அதிகரிக்க வேண்டுமென அத்தகைய வேறுபாட்டினால் தேவைப்படுத்தப்படுமிடத்து, அதனால் பணச்சபைக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது, அத் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவதற்கெனப் பன்னிரண்டு மாத காலப்பகுதி, அல்லது பணச் சபையினால் வழங்கப்படக்கூடிய அத்தகைய நீட்டிய காலப் பகுதி அதற்கு அளிக்கப்படுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(5) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி பணச்சபையின் முன்கூட்டிய எழுத்திலான அங்கீகாரமில்லாது அதன் ஒப்புரவு மூலதனத்தைக் குறைத்தலாகாது.";

(3) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(7) (அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் எல்லா நேரங்களிலும், பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான மூலதன நிறைவு விகிதத்தைப் பேணிவருதல் வேண்டும்; பேணப்பட வேண்டிய அத்தகைய விகிதத்தைத் தீர்மானிப்பதில் பணச்சபையானது செயல்முறைக்கூகந்த அளவு வரை, பன்னாட்டுத் தீர்ப்பனவுகளுக்கான வங்கியினால் தரப்பட்டுள்ள மூலதன நிறைவுக்கான வழிகாட்டு நெறிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ)வில் குறிப்பிடு செய்யப்பட்ட மூலதன நிறைவு விகிதத்திலான ஏதேனும் வேறுபாடு பணச்சபையினால் எழுத்தில் ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கும் அறிவிக்கப்படுதல் வேண்டும்; ஆயின், அதன் மூலதனத்தை அதிகரிக்குமாறு அத்தகைய வேறுபாட்டினால் தேவைப்படுத்தப்படும் ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கும், அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவதற்கெனப் பன்னிரண்டு மாத காலப்பகுதி அல்லது பணச்சபையினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய நீட்டிய காலப்பகுதி அளிக்கப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(4) அப்பிரிவின் (8)ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும்.

(5) அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவில் "மூலதனம் அல்லது மூலதன நிதியங்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒப்புரவு மூலதனம் அல்லது மூலதன நிதியங்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக "தவறுகை" என்பது —

(அ) நேரடிப் பங்குபற்றுநர் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரைப் பொறுத்தவரையில் இக்கட்டளைச் சட்டத்தினால் அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் பணியை புரிவதில் அல்லது ஏதேனும் கடமையை நிறைவேற்றுவதில் அவரினால் காட்டப்படும் ஏதேனும் அசட்டை அல்லது தவறுகை ; அத்துடன்

(ஆ) (i) அத்தகைய தவறு தொடர்பில் ஏதேனும் வழக்குத் தொடர்தல் இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன ; அல்லது

(ii) அத்தகைய செயல் அல்லது விட்டுவிடுகை, நேரடிப் பங்குபற்றுநரினால் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநரினால் அல்லது அத்தகைய நேரடிப் பங்குபற்றுநரின் அல்லது அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின் பணிப்பாளர், அலுவலர், ஊழியர் அல்லது முகவர் எவரினாலும் செய்யப்பட்டிருந்தாலென்ன, இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமைகின்றதும் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரினால் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரினால் செய்யப்படும் செயல் அல்லது புரியப்படும் விட்டுவிடுகை எதுவும் அல்லது இக்கட்டளைச் சட்டத்துக்குள் அடங்குகின்ற ஏதேனும் விடயம் தொடர்பில் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின்கீழ் தவறு ஒன்று, ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

வணிகர் நேரடிப் பங்கு பற்றுநர்.

21உ. (1) மத்திய வங்கியானது வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவராக இருப்பதற்கு நேரடிப் பங்கு பற்றுநர் எவரையும் எழுத்தில் நியமிக்கலாம்.

(2) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் அதன் சொந்தக் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிக் கணக்குடன் சேர்த்தும், தனிவேறாகவும், கூட்டுமொத்த வாடிக்கையாளர்கள் கணக்கொன்றையும் மத்திய வங்கியுடன் பேணுதல் வேண்டும். இக்கணக்கானது, அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் மூலம் இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் எல்லாக் கைமாற்றல்கள் தொடர்பிலும் தனி ஒரு கூட்டுமொத்தக் கணக்காக இருத்தல் வேண்டும். கூட்டுமொத்த வாடிக்கையாளர்கள் கணக்கு மத்திய வங்கியினால் காலத்துக்குக்காலம் எழுத்தில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும், வணிகர் நேரடிப் பங்குபற்றுநரினால் பேணப்படுதல் வேண்டும்.

(3) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்கள் மாத்திரமே மற்றவர்கள் சார்பில் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகளில் கொடுக்கல் வாங்கல் செய்யலாம். கட்டுப்பணமில்லா திறைசேரி முறியொன்றை கைமாற்ற விரும்புகின்ற அல்லது கைமாற்றல் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புகின்ற நேரடிப் பங்குபற்றுநர் அத்துடன் ஒருவர் அல்லது மத்திய வங்கி தவிர்ந்த ஆள் எவரும் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் மூலமாக மட்டுமே அவ்வாறு செய்தல் வேண்டும்.

(4) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் அதன் ஒவ்வொரு வாடிக்கையாளர் தொடர்பிலும் கணக்கொன்றையும் அத்துடன் இச்சட்டத்தின் கீழ் வணிகர் நேரடிப்பங்குபற்றுனர் தமது கடமைகளைப் புரிவதற்கு அவரை இயலக்கூடியவராகச் செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறாக அல்லது பொருத்தமாகக் கூடியவாறாக அதன் வாடிக்கையாளர்கள் தொடர்பில் வேறு எவையேனும் புத்தகங்களை, பதிவேடுகளை அத்துடன் கோப்புகளைப் பேணுதல் வேண்டும்.

(5) வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் ஒருவர் அதன் வாடிக்கையாளர் ஒவ்வொருவருக்கும் அத்தகைய வாடிக்கையாளர்கள் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகள் தொடர்பில் மத்திய வங்கியினால் அதற்கெனக் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அல்லது அத்தகைய திகதிகளன்று அல்லது அவற்றுக்கு முன்னர் மாதாந்த

கூற்றொன்றை அல்லது கூற்றுக்களை அல்லது வேறு பருவகாலக் கூற்றை அல்லது கூற்றுக்களை வழங்குதல் வேண்டும். அத்தகைய கூற்று ஒவ்வொன்றும் அத்தகைய காலப்பகுதிக்காகவும் அத்தகைய படிவத்திலும் இருத்தல் வேண்டும் என்பதுடன் மத்தியவங்கி குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(6) வணிகர் நேரடிப்பங்குபற்றுநரின் கூட்டுமொத்த வாடிக்கையாளர்கள் கணக்கில் வைத்திருக்கப்படும் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகள் மீது வருமதியான தொகைகளுக்கு 21ஈ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு மத்திய வங்கியிடமிருந்து அத்தகைய கொடுப்பனவுகளை வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் பெற்றுக்கொண்டதன்மேல், அவர் அதற்கு உரித்தான திறத்தவருக்கு அல்லது திறத்தவர்களுக்கு அத்தகைய கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகள் மீது செலுத்தற்பாலனவான எல்லாத்தொகைகளையும், அவற்றை ஒன்றில் வட்டியாக அல்லது பணத்தொகையாக அல்லது மீட்பு வரும்படிகளாக அவை செலுத்தப்படற்பாலனவாக வரும் திகதியன்று செலுத்தப்படல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவுகள் அத்தகைய வழிகள் மூலமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்திலும் அத்தகைய முறையிலும் செய்யப்படுதலும் வேண்டும்.

(7) வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் ஒருவர் மூலம் இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்படும் ஏதேனும் கைமாற்றம் தொடர்பில் அவரினால் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகளானவை, இப்பிரிவிலும் 21ஊ என்னும் பிரிவிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையிலும் நோக்கங்களுக்காகவும் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுதல் வேண்டும்.

(8) இப்பிரிவின் கீழ் (2) ஆம் (4) ஆம் உட்பிரிவுகளின் கீழ் வணிகர்நேரடிப்பங்குபற்றுநர் ஒருவரினால் பேணப்படும் கணக்குகள், அவை வாடிக்கையாளர் தொடர்பானதாக இருக்கும் அளவுக்கு, வணிகர் நேரடிப்பங்குபற்றுநருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையில் இருப்பது போன்று இரகசியமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், இக்கட்டளைச் சட்டத்தின் 53 ஆம் பிரிவில் உள்ள எது எப்படியிருப்பினும், மத்திய வங்கி அல்லது வாடிக்கையாளரின் பின்னுரிமையாளர்கள், நிறைவேற்றுநர்கள் அல்லது சாட்டுதல் பெறுநர்

கள் தவிர்ந்த எவரேனும் ஆளுக்கு அல்லது சட்டத்தினால் வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டவாறு தவிர, அத்தகைய வெளிவிடுகைக்கு வாடிக்கையாளர் எழுத்தில் அதிகாரம் அளித்திருந்தாலொழிய, வெளிவிடப்படுதலாகாது.

(9) வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் ஒருவர் அத்தகையவணிகர் நேரடிப்பங்குபற்றுநர் மூலம் அத்தகைய வாடிக்கையாளரினால் பெற்றுக்கொள்ளப்படும் அல்லது செய்யப்படும் எல்லாக் கைமாற்றல்கள் தொடர்பிலும் வாடிக்கையாளர் ஒருவருக்கு முழுப்பொறுப்புடையவரும் பொறுப்பாளியும் ஆதல் வேண்டும்.

கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகளின் கைமாற்றல்கள்.

21ஊ. (1) வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் ஒருவர் கைமாற்றல் பெறும் ஒருவர் தொடர்பில் வாடிக்கையாளர்கள் கணக்கானது இன்னொரு வணிகர் நேரடிப் பங்குபற்றுநரினால் பேணப்படுகின்ற சந்தர்ப்பம் தவிர, மத்தியவங்கி அல்லது 21உ என்னும் பிரிவின் (3) ஆம் பிரிவிற்கு இணங்க அத்தகைய வணிகர் நேரடிப்பங்கு பற்றுநர் மூலம் செய்யப்படும் ஏதேனும் கைமாற்றலுக்குத் திறத்தவர் ஒருவரான நேரடிப்பங்குபற்றுநர் தவிர்ந்த கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகளின் கைமாற்றம் செய்பவர் மற்றும் கைமாற்றல் பெறுபவர் ஆகிய ஒவ்வொருவர் தொடர்பிலும் கணக்கொன்றைப் பேணுதல் வேண்டும். இவ்விடயத்தில் முதற்குறிக்கப்பட்ட வணிகர் நேரடிப்பங்குபற்றுநர், கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகளை இரண்டாவதாகக் குறிக்கப்பட்ட நேரடிப்பங்குபற்றுநரிடமுள்ள கைமாற்றல் பெறுபவரின் கணக்குக்குக் கைமாற்றல் செய்ய வேண்டும்.

(2) இருபத்தொன்று உ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கிணங்க ஆள் எவரினாலும், கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகளின் கைமாற்றலொன்று செய்யப்படுகின்றவிடத்து, எவ்வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் மூலமாக கைமாற்றல் செய்யப்படுகின்றதோ அவ்வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் மத்தியவங்கியினால் காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் பின்வருவனவற்றை உடனடியாக வழங்குதல் வேண்டும் :—

(i) கைமாற்றல் செய்பவருக்கு ஓர் உறுதிச்சீட்டு அல்லது கிடைக்கப்பெற்றமைபற்றிய அறிவித்தல்; அத்துடன்

(ii) கைமாற்றம் பெறுநரின் திறைசேரி முறிகள் தொடர்பாக, அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநர், கணக்கொன்றைப் பேணினால், அத்தகைய கைமாற்றம் தொடர்பில் ஓர் உறுதிப்படுத்துகை அல்லது பெற்றுக் கொண்டமை பற்றிய பற்றுச் சீட்டு,

ஆயின் எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் தவிர்ந்த வணிகர் நேரடிப்பங்கு பற்றுநர் ஒருவர் கைமாற்றம் பெறுநரின் கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகள் தொடர்பில் வாடிக்கையாளர் ஒருவரின் கணக்கொன்றைப் பேணினால், முதலில் குறிப்பிட்ட வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் காலத்துக்குக் காலம் மத்திய வங்கியால் குறித்துரைக்கப்படும் விதத்தில் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட வணிகர் நேரடிப்பங்குபற்றுநருக்கு அத்தகைய கைமாற்றம் பற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் மத்திய வங்கியினால் காலத்துக் காலம் குறித்துரைக்கப்படும் படிவத்திலும் விதத்திலும் ஓர் உறுதிப்படுத்துகையை அல்லது பெற்றுக் கொண்டமைபற்றிய பற்றுச் சீட்டை உடனடியாக கைமாற்றம் பெறுநருக்கு வழங்குதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுதிப்படுத்துகை அல்லது பெற்றுக் கொண்டமை பற்றிய பற்றுச் சீட்டு கைமாற்றப்படக் கூடியதாக இருத்தலாகாது என்பதுடன், அது தொடர் புறுத்துகின்றதான 21உ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளை கைமாற்றியமைக்குச் சான்றாக அதனை வழங்கியவரான வணிகர் நேரடிப்பங்குபற்றுநருக்கும் அது எந்த வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டதோ அந்த வாடிக்கையாளருக்கும் இடையில், மாத்திரம் பயன் படுத்தப்படுதல் வேண்டும்.

(4) கூட்டு மொத்த வாடிக்கையாளர் கணக்கில், வணிகர் நேரடிப் பங்குபற்றுநரொருவரால் மத்திய வங்கியில் பேணப்படும் மொத்தக் கணக்கு, 21உ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கிணங்க, வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கூடாகப் பயனுறுத்தப்பட்ட கைமாற்றமொன்றினால் பாதிக்கப்படுமிடத்து, வணிகர்

நேரடிப்பங்குபற்றுநர், அத்தகைய கைமாற்றமொன்றி னால் அத்தகைய மொத்தத் தொகையில் ஏற்படுத்தப் பட்ட ஏதேனும் மாற்றம் பற்றிய தகவலை உடனடி யாக மத்திய வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) மத்திய வங்கியானது, இப்பிரிவின் கீழ் தேவைப் படுத்தப்பட்ட ஏதேனும் அறிவித்தலை அல்லது உறு திப்படுத்துகையை அல்லது ஏற்றுக்கொண்டமை பற் றிய பற்றுச்சீட்டை எழுத்தில் இல்லாத வடிவத்தில் இருப்பதற்கு அனுமதிக்கலாமென்பதுடன், மத்திய வங் கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான கம்பி. தொலைபேசி, செய்மதி, வடம் அல்லது ஏதேனும் அத் தகைய வேறு இலத்திரனியல், காந்த அல்லது ஒளிச் சாதனம் வாயிலாக அனுப்பப்பட அல்லது ஒப்படைக் கப்பட அனுமதிக்கப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு "ஒவ்வோர் அரையாண்டிலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒவ்வொரு காலப் பகுதிக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) பதிவு செய்யப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதி அல்லது பிணையங்கள் மீது வருமதியான வட்டி 4 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளை மூலம் குறித்துரைக்கப்படும் திகதி களில் கொடுபடற்பாலனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"ஆழ் நிதியத் திற்கான ... அரசிறையை ஒதுக்கீடு செய்தல்.

27. ஏதேனும் கடனுக்கான ஆழ் நிதியத்திற்கு உதவுதொகைகள் எந்தத் திகதியன்று செலுத்தல் தொடங்குதல் வேண்டுமோ அந்தத் திகதியென, 4 ஆம் பிரிவின் கீழான கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்குப் பின்னர், அந்தக் கடன் தொடர்பில் வழங் கப்படும் ஏதேனும் பங்குத் தொகுதி மீதிலான அல் லது பிணையங்கள் மீதிலான வட்டிக் கொடுப்பனவுத் திகதி என அக்கட்டளையில் குறித்துரைக்கப்படும் திகதியுடன் முடிவடையும் காலப்பகுதி ஒவ்வொன் றிற்கும் அந்தக் கடனை மீளும் நோக்கத்திற்கென நாமிக்கப்பட்ட ஆழ் நிதியத்திற்கெனக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட வீதத்திற்கிணங்கத் தீர்மானிக் கப்பட்ட பணத்தொகையொன்றைத் திரட்டு நிதியத் திலிருந்தும். இலங்கையில் உள்ள சொத்துக்களிலிருந் தும் ஒதுக்கீடு செய்யப்படலாம்.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு "அரை ஆண்டு உதவுத் தொகைக் கொடுப்பனவுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உதவுத் தொகைக் கொடுப்பனவு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"பங்குத் தொகுதிச் சான்றிதழ்களையும் பிணையங்களையும் புதுப்பித்தல்.

38. உருவழிக்கப்பட்டதான அல்லது சேதமுற்றதான பங்குத் தொகுதிச் சான்றிதழொன்று, வாக்குறுதிப் பத்திரம், காவுவோன்முறி அல்லது திறைசேரி முறி, அல்லது புறக்குறிப்புக்கென ஏற்பாடு செய்யப்பட்ட இடவெளியாவும், அந்நோக்கத்திற்கெனப் பயன்படுத்தப்பட்டதான வாக்குறுதிப்பத்திரம் அல்லது முறியுடன் ஆரம்பத்தில் இணைந்துள்ள வட்டிக் கூப்பன்களின் காலப்பகுதி முடிவில் ஒரு காவுவோன் முறி அல்லது திறைசேரி முறி பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்டதன்மேல், பதிவாளர் சான்றிதழை பத்திரத்தை அல்லது முறியை ஒப்படைக்கின்ற ஆட்களின் உரிமைக் கோரிக்கை நீதியானதும் சட்டபூர்வமானதுமெனத் திருப்தியடைந்தால், விதித்துரைக்கப்பட்ட கட்டணம் ஏதும் இருப்பின், அதனைச் செலுத்தியதன் மேல் அதே வகுப்பை அல்லது தொடரையும் பெறுமதியையுங்கொண்ட புதிய சான்றிதழொன்றை பத்திரமொன்றை, முறியொன்றை அத்தகைய ஆளுக்கு வழங்கலாமென்பதுடன், புதுப்பிப்பதற்காக அவரிடம் ஒப்படைக்கப்பட்ட சான்றிதழை, பத்திரத்தை அல்லது முறியை அதன் மேல் நீக்கஞ் செய்யலாம். ".

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு, "வாக்குறுதிப் பத்திரம் அல்லது காவுவோன் முறி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வாக்குறுதிப் பத்திரம் காவுவோன் முறி, அல்லது திறைசேரி முறி" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. பின்வரும் பிரிவுகள், 53 ஆம் பிரிவை உடனடுத்து, இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 53அ, 53ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தில் 53அ, 53ஆ என்னும் பிரிவுகளை உட்புகுத்துதல்.

"அலுவலர்கள் முதலானோரால் பிரயோகிக்கப்படும் மத்திய வங்கியின் தத்துவங்கள்.

53அ. இக்கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி மத்திய வங்கியினால் பிரயோகிக்கப்பட வேண்டும் அல்லது புரியப்பட வேண்டுமெனத் தேவைப்படும் போதெல்லாம் அல்லது அதிகாரமளிக்கப்படும் போதெல்லாம் அத்தகைய தத்துவம், கடமை, அல்லது பணி மத்திய வங்கியின் அலுவலர் ஒருவரால், அல்லது மத்திய வங்கியின் நாணயச்சபையால அதன் சார்பில் எழுத்திலான அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் ஆளினால் பிரயோகிக்கப்படலாம் அல்லது புரியப்படலாம்.

"செயலுக்கான பாதுகாப்பு

53ஆ. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ், அரசாங்கத்தினால் மத்திய வங்கியின் பணச் சபையினால், பதிவாளரால் அல்லது அத்தகைய வேறு அலுவலரால் அல்லது சேவையாளரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு அல்லது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் அரசாங்கம் மத்திய வங்கியின் பணச்சபை பதிவாளர், எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் என்போருக்கு எதிராகத் தொடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவு, (2) ஆம் உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை அப்பிரிவின் (க) என்னும் பந்தியாக மீள இலக்கமிடுவதன் மூலமும் அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஏ) முதனிலை வணிகர்களை நியமித்தலும், அவர்களால் அவதானிக்கப்படவேண்டிய நிபந்தனைகள், அவர்களின் சிறப்புரிமைகள், அவர்களால் புரியப்படவேண்டிய கடமைகள்;

(ஐ) நேரடிப் பங்குபற்றுநர்கள், வணிகர் நேரடிப்பங்குபற்றுநர்கள் அத்துடன் வணிகர் இடைத்தரகர்கள், என்போரின் நியமனம் அத்துடன் அவர்களை ஒழுங்குபடுத்தல் மேற்பார்வை அல்லது கண்காணிப்பு;

(ஒ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளை வழங்குதல், வைத்திருத்தல், அத்துடன் அவற்றை நிருவகித்தல் ;

(ஓ) கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகள் அல்லது அதனகத்துள்ள வட்டிகள் உட்படப் பங்குத்தொகுதியும் பிணையங்களும், கொள்வனவு செய்யப்படக்கூடிய, விற்பனை செய்யப்படக்கூடிய, கைமாற்றம் செய்யப்படக்கூடிய, அடகுவைக்கப்படக்கூடிய அல்லது பாசபந்தத்திற்கு உட்படுத்தப்படக்கூடிய விதம்;

(ஔ) பங்குத் தொகுதி அத்துடன் பிணையங்கள் தொடர்பிலான முதனிலை வழங்குகை, அத்துடன் அடுத்துறும் கைமாற்றங்களும் பிற கொடுக்கல் வாங்கல்களும் என்பவற்றிற்கு ஏற்புடைத்தான நடவடிக்கை முறைகளும் நிபந்தனைகளும் ; அத்துடன்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 56அ 56ஆ என்னும் பிரிவுகளை உட்புகுத்துதல்.

15. பின்வரும் பிரிவுகள், 56ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 56அ, 56ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"தவறுகள்

56அ. (1) எந்த ஆள், மத்திய வங்கியின் எவையேனும் பதிவேடுகளில் அல்லது எவரேனும் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர், அல்லது எவரேனும் முதனிலை

வணிகர் உட்பட எவரேனும் நேரடிப் பங்குபற்றுநரின் ஏதேனும் புத்தகங்களின், பதிவேடுகளில், அல்லது கணக்குகளில் —

(அ) இக்கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுடன் அல்லது அதன்கீழ் தரப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியுடன், கட்டளையுடன், அல்லது பணிப்புடன் இணங்கியொழுகத் தவறுகின்றாரோ;

(ஆ) இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அவரது அறிவுக்கெட்டியவரை பொய்யான அல்லது செம்மையற்றதான ஏதேனும் தகவலை அல்லது உள்ளடக்கங்களைக் கொண்ட ஏதேனும் விபரத்திரட்டைக் கொடுத்துதவுகின்றாரோ;

(இ) ஏமாற்றும் கருத்துடன் —

(i) பொய்யான பதிவொன்றைச் செய்கின்றாரோ, அல்லது செய்விக்கின்றாரோ; அல்லது

(ii) ஏதேனும் பதிவைச் செய்யாது விடுகின்றாரோ; அல்லது செய்யாது விடுவிக்கின்றாரோ; அல்லது

(iii) ஏதேனும் பதிவை மாற்றுகின்றாரோ, மறைக்கின்றாரோ, அழிக்கின்றாரோ அல்லது மாற்றுவிக்கின்றாரோ, மறைப்பிக்கின்றாரோ, அல்லது அழிப்பிக்கின்றாரோ ;

அந்த ஆளெவரும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ், தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் ஆளெவரும், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு, அல்லது ஒரு கோடி ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

பணிப்பாளர்களினதும் அலுவலர்களினதும் தவறு.

56ஆ. இக்கட்டளைச் சட்டத்தின்கீழ், தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆள், கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்து தவறொன்றைப் புரியும் நேரத்தில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒருவராக அல்லது அலுவலரொருவராக இருந்தவரான ஒவ்வோர் ஆளும், அவர் தாம் அறியாமலே தவறு புரியப்பட்டது அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தவிர்ப்பதற்குரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் என எண்பித்தாலன்றி அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) "காவுவோன் முறி" என்பதன் வரைவிலக்கணத்திற்கு நேர் முன்னதான பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"கூட்டுவாடிக்கையாளர் கணக்கு" என்பது 21உ என்னும் பிரிவின் (3)ஆம் உட்பிரிவுக்கிணங்க மத்திய வங்கியுடன் வணிகர் நேரடிப் பங்குபற்றுநரினால் பேணப்படும் தனியான கணக்கு என்று பொருளாகும்.".

(அ) "காவுவோன் முறி" என்பதன் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :—

"வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் தொடர்பில் "வாடிக்கையாளர்" என்பது கட்டுநிதியற்ற திறைசேரி முறிகளை அல்லது அவற்றிலுள்ள ஓர் அக்கறையை அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கூடாக கொள்வனை செய்கின்ற அல்லது விற்கின்ற அல்லது வேறுவகையாகக் கொள்ளுகின்ற அல்லது கையுதிர்க்கின்ற அல்லது அத்தகைய முறிகளின் அல்லது அக்கறைகளின் இயலக்கூடிய கொள்ளுகைக்காக அல்லது கையுதிர்ப்புக்காக அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்ற எவரேனும் ஆள் என்று பொருளாகும்;

"வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்" என்பது வணிகர் நேரடிப் பங்குபற்றுநராக இருப்பதற்கென 21உ. என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எழுத்தில் மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட எவரேனும் நேரடிப் பங்குபற்றுநர் என்று பொருளாகும்;

"அனுமதிப்பெயர் குறிக்கப்பட்ட வணிகரல்லாத விலைக் கேள்வி யாளர்" என்பது மத்திய வங்கியின் பிணையங்களின் ஏல விற்பனையில் நேரடியாக விலை கேட்பதற்குத் தகுதி யுடையவரென மத்திய வங்கியினால் எழுத்தில் நியமிக்கப் பட்ட முதல் நிலை வணிகர் அல்லாத ஏதேனும் நிறுவ னம் என்று பொருளாகும்;

"நேரடிப் பங்குபற்றுநர்" என்பது நேரடிப் பங்குபற்றுநர் ஒரு வராக இருக்கவென 21ஈ என்னும் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின்கீழ் எழுத்தில் மத்திய வங்கியினால் நியமிக்கப் பட்ட எவரேனும் முதநிலை வணிகர் அல்லது வேறு ஆள் என்று பொருளாகும்;

"வணிகரிடைத் தரகர்" என்பது 21இ என்னும் பிரிவின் (2) (உ) என்னும் உட்பிரிவினைப் பின்பற்றி மத்திய வங்கியினால் வணிகரிடைத் தரகர் ஒருவராக இருப்பதற்கென நியமிக் கப்பட்ட எவரேனும் ஆள் அல்லது குழாம் என்று பொரு ளாகும்;

"வணிகரல்லாத நேரடிப் பங்குபற்றுநர்" என்பது வணிகர் நேர டிப் பங்குபற்றுநர் ஒருவராக இராத எவரேனும் நேரடிப் பங்குபற்றுநர் என்று பொருளாகும்;

"அடைமானம்" என்பது கடன்களுக்கான அல்லது முற்பணங் களுக்கான இணைப்பொறுப்பாக அல்லது பகிரங்கப் பணங்களின் வைப்புக்களை அல்லது கடப்பாடொன்றின் நிறைவேற்றுகையைப் பெற்றுக்கொள்ளுவதற்காக கட்டுப் பணமற்ற திறைசேரி முறிகளை அடைமானம் வைத்தலை அல்லது அவற்றிலான ஏதேனும் பிணைப்பொறுப்பு அக் கறையை உள்ளடக்கும்.".

(இ) "விதித்துரைக்கப்பட்ட" என்பதன் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் :—

"முதநிலை வணிகர்" என்பது பங்குத்தொகுதிகளுக்கும் பிணை யங்களுக்குமான முதனிலை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தைகளில் மாற்றுத் திறத்தவர்களாக மத்திய வங்கி யுடன் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யும் நோக்கத்திற் காக முதநிலை வணிகராக பணச்சபையினால் நியமிக் கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி, கம்பெனி, அல்லது வேறு ஆள் என்று பொருளாகும் ; ".

(ஈ) "வாக்குறுதிப் பத்திரம்" என்பதன் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூல மும் :—

"வட்டிவீதம்" என்பது 4 ஆம் பிரிவின் (1) (இ) என்னும் உட் பிரிவின்கீழான கட்டளை ஒன்றன் நியதிகளில் குறித் துரைக்கப்பட்ட முறை ஏதும் இருந்தால் அதற்கிணங்கத் தீர்மானிக்கப்படும் ஒரு வட்டி வீதத்தையும் உள்ளடக் கும் ;

"மத்திய வங்கியின் பதிவேடுகள்" என்பது சபையினால் அந் நோக்கத்திற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் மத்திய வங்கியின் சார்பில் பேணப்படும் பதிவேடுகளை உள்ளடக்கும் என்பதுடன் கணனிக் கோவைகள், தட்டுகள், நாடாக்கள் அல்லது வேறு காந்த, இலத்திரனியல் அல்லது கட்புல சாதனங்கள் மூலம் வைத்திருக்கப்படும், களஞ்சியப்படுத்தப்படும் அல்லது அனுப்பப்படும் பதிவேடுகளையும் உள்ளடக்கும்.

(உ) "பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி" என்பதன் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும் :—

"கட்டுப்பணமற்ற திறைசேரி முறிக் கணக்கு" என்பது 21ஈ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கிணங்க மத்திய வங்கியுடனான நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரால் வேண்டப்பட்டுவரும் தனிக் கணக்கு என்று பொருளாகும்;

"கட்டுப்பணமற்ற திறைசேரி முறி" என்பது சான்றிதழ் ஒன்றில் அல்லது வேறு சாதனத்தில் உள்ளடக்கப்படாததும் அல்லது குறிக்கப்படாததும் மத்திய வங்கியின் பதிவேடுகளில் உள்ள பதிவிடுகளாக வழங்கப்பட்ட திறைசேரி முறி ஒன்று என்று பொருளாகும்.

(ஊ) "பிணைப்பொறுப்பு" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"பிணைப்பொறுப்பு" என்பது காவோன் முறி அல்லது வாக்குறுதிப் பத்திரம் அல்லது திறைசேரி முறி ஒன்று என்று பொருளாகும்.

(எ) "பிணைப்பொறுப்பு" என்பதன் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்த இடுவதன் மூலமும் :—

"திறைசேரி முறி" என்பது இக்கட்டளைச்சட்டத்தின்கீழும் 37, 38, 39, 42, 44, 46(ஆ), அத்துடன் (இ), 49, 52 அத்துடன் 55(2)(இ) அத்துடன் (ஈ) ஆகிய பிரிவுகளின்கீழ் தவிரவும் வழங்கப்பட்ட திறைசேரி முறி ஒன்று என்று பொருளாகும் என்பதுடன் கட்டுப்பணம் அற்ற திறைசேரி முறி ஒன்றையும் உள்ளடக்குகின்றது.

17. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 (வெளிநாட்டு) ரூபா 1,840 ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல. 32 திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்